Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

<u>நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள்</u>
<u>807, அண்ணா சாலை, சென்னை-600 002.</u>
<u>முன்னிலை: திரு ஆ.கார்த்திக், இ.ஆ.ப.,</u>
<u>www.tn.gov.in/dtcp</u>
email id: dtcp@vsnl.net

<u>ந.க.எண்.19994/2012/பிஏ2</u> <u>நாள்:05.02.2013</u>

பொருள்: நகர் ஊரமைப்புத் துறை, சென்னை-2 - கட்டிடம் - செங்கல்பட்டு மண்டலம் - காஞ்சிபுரம் மாவட்டம் - செங்கல்பட்டு வட்டம் - மறைமலைநகர் நகராட்சி - பொத்தேரி கிராமம், சர்வே எண்கள்:207/1ஏ, 1பி-ல் 8538.74 சதுரமீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்தில் பிளாக்-1, 2, 3, 4 - ஸ்டில்ட் + 4 தளங்களில் 152 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்புகள் கட்டுமானத்திற்கு - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் திரு திலிப் கிம்சுரா என்பவரின் கடிதம் நாள்:24.5.2012 மற்றும் 5.12.2012.
2. ஆணையர், மறைமலைநகர் நகராட்சி கடிதம் ந.க.எண்.51/2012/அ1, நாள்:25.1.2012.
3. மண்டல துணை இயக்குநர்(பொ.), செங்கல்பட்டு மண்டலம் கடிதம் ந.க.எண்.1437/2012 செம-3, நாள்:18.9.2012.
4. அரசாணை (நிலை) எண்.86 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:28.3.2012.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்:16.4.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009 பிஏ1, நாள்:4.4.2012.

<u>உத்தரவு:</u>

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சி, பொத்தேரி கிராமம், சர்வே எண்கள்:207/1ஏ, 1பி-ல் 8538.74 சதுரமீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு "ABCD" என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்,

தளம் விபரங்கள்	பிளாக்-1 (சதுரமீட்டரில்)	பிளாக்-2 (சதுரமீட்டரில்)	பிளாக்-3 (சதுரமீட்டரில்)	பிளாக்-4 (சதுரமீட்டரில்)
ஸ்டில்ட் தளம் (வாகனம் நிறுத்தும் இடம்)	1328.42	926.35	776.30	804.91
முதல் தளம்	1086.12	795.44	697.20	660.18
இரண்டாம் தளம்	1086.12	795.44	697.20	660.18
3ம் தளம்	1086.12	795.44	697.20	660.18
4ம் தளம்	1086.12	795.44	697.20	660.18
மொத்தக் குடியிருப்புகள்	4X12=48	4X10=40	4X8=32	4X8=32

பிளாக்-1, 2, 3 மற்றும் 4-ல் மொத்தக் குடியிருப்புகள் = 152

Scanned by CamScanner

மேற்கண்ட உத்தேச 152 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி/திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.33/2013 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண்.1 முதல் 6 வரை உள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் 854.95 சதுரமீட்டர் இடத்தினை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும், சம்மந்தப்பட்ட செங்கல்பட்டு மண்டல அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
2. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தின் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்பட வேண்டும்.
3. பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்மந்தப்பட்ட செங்கல்பட்டு மண்டலம், மண்டல துணை இயக்குநர்(பொ.) அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
5. காஞ்சிபுரம் மாவட்ட வன அலுவலரின் தடையின்மை சான்று பெற்று மனுதாரர் சமர்ப்பித்த பின்னர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ.), செங்கல்பட்டு மண்டலம் கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்:</u>

1) உத்தேச குடியிருப்புகள் உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

..3..

Scanned by CamScanner

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13) உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன்படி மனுதாரர் மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 5 மற்றும் 6-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல், நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் செங்கல்பட்டு மண்டல அலுவலகத்தால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

செங்கல்பட்டு மண்டலம், மண்டல துணை இயக்குநர் (பொ.) அவர்கள் மேற்கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு செங்கல்பட்டு மண்டலம், மண்டல துணை இயக்குநர் (பொ.) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: மூன்று தொகுப்பு வரைபடங்கள் (3X11=33).

(ஒம்)/-ஆ.கார்த்திக்
நகர் ஊரமைப்பு ஆணையர்

பெறுநர்:
மண்டல துணை இயக்குநர் (பொ.),
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

5/2/17

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

Scanned by CamScanner

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம்
நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.S.தனராசு, பி.இ,

ந.க.எண்.1437/2012/செம3

நாள்26 .08.2013.

பொருள் கட்டிடம் - செங்கல்பட்டு மண்டலம் - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சி, பொத்தேரி கிராமம், சர்வே எண்கள்.207/1A, 1B -ல் 8538.74 சமீ கொண்ட மனையிடத்தில் Block- 1, 2, 3, 4 ஸ்டில்ட் + 4 தளங்களில் 152 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டுமான வரைபடங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல் - குறித்து.

பார்வை
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் நக.எண்.19994/12/பிஏ2, நாள்.04.02.2013
2. ஆணையர், மறைமலைநகர் நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.51/2012/அ1, நாள். 25.01.2012
3. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009
4. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.21075/2009/பிஏ1, நாள்.04.04.2012
5. அரசாணை நிலை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.28.03.2012
6. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள். 15.02.2013 மற்றும் 08.03.2013-ல் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி, தேசிய சிறுசேமிப்பு பத்திரம் ஆகியவை செலுத்தக் கோரியது மற்றும் பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது
7. மனுதாரர் திரு.திலிப்கிம்சுரா அவர்களின் கடிதம் நாள்.04.03.2013, 10.05.2013 மற்றும் 26.08.2013 (பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான விவரம் மற்றும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி மற்றும் தேசிய சிறுசேமிப்பு பத்திரம் செலுத்தியதற்கான விவரம்)
8. காஞ்சிபுரம் மாவட்ட வனஅலுவலரின் தடையின்மைச் சான்று கடிதம் எண்.3576/2013 நாள். 23.08.2013

******

உத்தரவு

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மறைமலைநகர் நகராட்சி, பொத்தேரி கிராமம், சர்வே எண்கள்.207/1A, 1B-ல் 8538.74 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு "ABCD" என எல்லையிட்டு மனையிடஒப்புதலும், அம்மனையில் குடியிருப்பு கட்டுமானங்கள் கீழ்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

தளம் விபரங்கள்	பிளாக் - 1 (சதுர மீட்டரில்)	பிளாக் - 2 (சதுர மீட்டரில்)	பிளாக் - 3 (சதுர மீட்டரில்)	பிளாக் - 4 (சதுர மீட்டரில்)
ஸ்டில்ட தளம் (வாகனம் நிறுத்தும் இடம்	1328.42	926.35	776.30	804.91
முதல் தளம்	1086.12	795.44	697.20	660.18
இரண்டாம் தளம்	1086.12	795.44	697.20	660.18
3-ம் தளம்	1086.12	795.44	697.20	660.18
4-ம் தளம்	1086.12	795.44	697.20	660.18
மொத்த குடியிருப்புகள்	4 x 12 = 48	4 x 10 = 40	4 x 8 = 32	4 x 8 = 32

பிளாக் -1, 2, 3 மற்றும் 4-ல் மொத்தக் குடியிருப்புகள் = 152

மேற்கண்ட உத்தேச 152 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன், பார்வை 1-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் முன்னிலை கடிதத்தில் கட்டிட அனுமதி வழங்க கட்டிட வரைபடங்களுக்கு கவ/நஊஇஎண்.33/2013 என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் கண்ட அரசாணையின்படி அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதி கட்டணம் மற்றும் நன்னிலை வரி ஆகிய கட்டணங்களை அரசுக்கு செலுத்தக்கோரியும் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு பொது ஒதுக்கீடு திறவிடத்தினை மறைமலைநகர் நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய கோரியும், பார்வை 6-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டு, பார்வை 7-ல் கண்ட மனுதாரரின் கடிதங்கள் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய I & A கட்டணம் ரூ.48,64,000/- மற்றும் நன்னிலை வரி ரூ.15,500/-ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரமும், பொது ஒதுக்கீடு திறவிடத்தினை (854.95 சமீ) மறைமலைநகர் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ததற்கான விவரமும் பெறப்பட்டுள்ளதால், பார்வை 8-ல் கண்ட காஞ்சிபுரம் மாவட்ட வன அலுவலரின் தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளதாலும், மேற்படி உத்தேச மனையிடத்திற்கு 'ABCD' என எல்லையிட்டு, மவ/நஊதுஇ(செம)எண்.175/2013 என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் உத்தேச குடியிருப்புகள் உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு கவ/நஊதுஇ(செம) எண்.80('1' முதல் '11' வரை)/2013 என எண்ணிட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் தமிழ்நாடு நகராட்சி கட்டிட விதி-ன் கீழ் இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

Scanned by CamScanner

சிறப்பு நிபந்தனைகள்

1. பொது ஒதுக்கீடு திறவிடங்களை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்படவேண்டும்.
2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

நிபந்தனைகள்

1. உத்தேச குடியிருப்புகள் உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்படவேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்படவேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்படவேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்படவேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும்; உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்புச் சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

Scanned by CamScanner

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

13. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (**Water Act**)-ன்படி மனுதாரர் மேற்படி வாரிய இணக்கம் (**Consent**) பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு ஆணையர், மறைமலைநகர் நகராட்சி அவர்களை அனுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், மறைமலைநகர் நகராட்சி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

26/8/13

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
செங்கல்பட்டு-1

26/8/13

20/8/13

<u>இணைப்பு</u>
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

<u>பெறுநர்</u>
ஆணையர்,
மறைமலைநகர் நகராட்சி
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

<u>நகல்</u>
Thiru.Dilip Khimsura
"High Gates"
No.82, DGS Dinakaran Salai,
(Santhome High Road)
MRC Nagar, Chennai - 28

Scanned by CamScanner



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate